Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள். சங்.136:9 ஏப்ரல் 2018 No.4

ஆண்டவரையும் அவரது வாக்குத்தத்தங்களையும் நம்புதல்

Trusting the Lord and His Promises

Rich Carmichael

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன், அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் எபி.11:6. இந்த வேத வசனத்தின்படி விசுவாசம் என்பது நாம் ஆண்டவரை எந்த கண்ணோட்டத்தில் பார்த்து தொடர்பு கொள்ளுகிறோம் என்பதைக் குறிக்கிறது. விசுவாசம் என்பது வாக்குத்தத்த வசனங்கள் மூலம் நம்மோடு பேசும் தேவனிடம் நாம் காண்பிக்கும் தனிப்பட்ட நம்பிக்கையின் பிரதிபலிப்பு என்றும் கூறலாம்.

இவ்வித விசுவாசத்தின் ஒரு சுவால் நம்மையும் உலகப் பொருட்களையும் சார்ந்திருப்பதை விட்டுவிட்டு ஆண்டவரை சார்ந்து கொள்ளவேண்டும் என்பது. நீதி.3:5-ன் படி சுயபுத்தியின் மேல் சாராமல் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருக்க வேண்டும். கிதியோன் 300 பேருடன் மிகப்பெரிய சேனையை எதிர்க்கச் செல்லுகிறான். ஏனெனில் அவன் ஆண்டவரைச் சார்ந்திருந்தான்.

"நாம் நமது பெலனைக் கூட்டுகிறோம்; பல உதவிகளை நாடுகிறோம்; கணக்கிடுகிறோம்; ஆயத்தப்படுகிறோம் எதற்காக? ஒரு எதிரியைத் தாக்க அல்லது நம்மை எதிரியிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள. ஆனால் எதிர்பாராத விதமாக ஜீவனுள்ள தேவன் இறங்கி வந்து, உனக்கு விசுவாசம் உண்டா? அப்படியானால் உனது ஆயுதங்களை வைத்துவிடு, நான் உனக்கு ஆயுதமாயிருக்கிறேன். தற்பாதுகாப்பை விலக்கிவிடு, நானே உனக்குப் பாதுகாவல், பெருமையை விட்டுவிடு; நானே உனக்குப் பெருமை என்று கூறுவார்" என்று டைட்றிக் போன்ஹோஃபர் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை என்னவெனில் தேவனுடைய நினைவுகள் நம்முடைய நினைவுகளல்ல, நம்முடைய வழிகள் அவருடைய வழிகளுமல்ல. ஏசா.55:8 எனவே அவரை நம்புவது என்பது நம்மையும், நமது அறிவையும் சார்ந்து கொள்ளாமல் அவரையும் அவரது குணாதியத்தையும், வார்த்தையையும், வாக்குத்தத்தங்களையும் சார்ந்து கொள்வதாகும்.

அவர் கட்டளையிடும் போது கீழ்ப்படிவதும், அமர்ந்திருக்கும்படி கூறும்போது காத்திருப்பதும், பணி செய்யக் கூறும்போது பணி செய்வதும் விடாமுயற்சி செய்யக் கூறும் போது விடாமுயற்சி செய்வதும் இவ்வாறாக இதய பூர்வ ஜெபத்துடன் அவரோடு கிட்டிச் சேருவதாகும்.

தேவனுடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிதல்

வேத புத்தகத்தில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான விசுவாச வீரர்களும் தேவனுடைய வார்த்தைக்கு அப்படியே உடனடியாகக் கீழ்ப்படிந்துள்ளனர். எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் இதன் பட்டியலைக் காண்கிறோம். விசுவாசத்தினாலே நோவா எச்சரிக்கை பெற்றவுடன் பேழையைச் செய்தான். விசுவாசத்தினால் ஆபிரகாம் எங்கு செல்வது என்பதை அறியாமலேயே புறப்பட்டுச் சென்றான் 11:8. ஒரு குமாரனைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணியபோது அவிசுவாசமின்றி அவரை முற்றிலும் நம்பினான் ரோமர் 4:20-21. தேவனால் சோதிக்கப்பட்ட போது தன் ஒரே புத்திரனை பலியிடத் தயங்கவில்லை எபி.11:17. மோசே அதரிசனமானவரை தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டு போனான் (11:27) விசுவாசத்தினாலே தாவீது கோலியாத்தை எதிர்த்து பெலிஸ்தியன் கையிலிருந்து இஸ்ரவேலரை விடுவித்தான். 1சாமு.17.

விசுவாசத்தினாலே எரேமியா சாசனங்களை வாங்கி, அனேக நாளிருக்கும்படி மண்பாண்டத்திலே வைத்தான். இது ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து வீடுகளையும், வயல்களையும், திராட்சத் தோட்டங்களையும் கொள்ளுவார்கள் என்ற தேவனுடைய வாக்குத் தத்தத்திற்கு அடையாளமாகச் செய்யப்பட்டது. அந்த வேளையில் சூழ்நிலைகள் நம்பிக்கையற்றவைகளாயிருந்தாலும், எரேமியா, "ஆ கர்த்தாவே, இதோ தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர். உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை எரே.32:17 என்று ஜெபித்தான்.

விசுவாசத்தினாலே எஸ்றா திரளான மக்களை திரும்ப எருசலேமுக்கு அழைத்துச் சென்றான். பிள்ளைகள், பொன், வெள்ளி போன்ற பொக்கிஷங்கள் இருந்தபோதும் எதிரிகளுக்குப் பயந்து அரசரிடம் பாதுகாப்பு கேட்கவில்லை. மக்களை ஜெபத்தோடும், உபவாசத்தோடும் அழைத்துச் சென்றான் (எஸ்றா 21:23-31) அவன் ஆண்டவருக்குள் அதிக உறுதியுடனிருந்தான். தன்னையும் தன்னோடு வந்த அனைவரையும் தேவ பாதுகாவலுக்கு ஒப்புக் கொடுத்து நம்பிக்கையுடன் முன்னேறினான்.

நெகேமியா முதல் அதிகாரத்தில் நெகேமியாவின் விசுவாசத்தைப் பார்க்கிறோம். தேவ ஜனத்தின் வேதனை, எருசலேமின் இடிபட்ட நிலைமை இவற்றைக் கண்டபோது அவனுடைய கவனத்தை ஆண்டவருக்கு நேராகவும், அவருடைய வாக்குத்தத்தங்கள், வலிமை ஆகியவற்றிற்கு நேராகவும் திருப்பினான். தேவனுடைய மகத்துவம், உத்தமம், இரக்கம், ஆகியவற்றை ஒத்துக்கொண்டு, மக்கள் அவருக்கு நேராகத் திரும்பினால் அவர்களைத் திரும்பிவரச் செய்யும் அவரது வாக்கை நினைவு படுத்தினான். அவன் ராஜாவுக்கு அதிகமாக பயந்திருந்தாலும் நெகே.2:2 அவரிடம் சென்று தான் எருசலேம் சென்று அதனை மறுபடியும் கட்ட அனுமதி கேட்டான். வழியில் பல சுவால்களையும் நேரடி எதிர்ப்புகளையும் சந்தித்தாலும், தனது நம்பிக்கை முழுவதையும் தேவனிடத்தில் வைத்து ஜெபித்து, தேவன் அவனது இருதயத்தில் வைத்ததை செய்யும்படியாக முயற்சித்தான்.

நான் தேவனை விசுவாசிக்கிறேன்

அப்.27:23,24 வசனங்களில் பவுலின் விசுவாசத்தைக் காணலாம். ஆதிரியாக்டலிலே கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபோது மக்கள் நம்பிக்கை இழந்தனர். தேவதூதன் பவுலிடம் அவனது ஜீவனையும், அவனோடு ரோமாபுரி சென்ற அனைவரது ஜீவனையும் தப்பவிடுவதாக வாக்குப் பண்ணினார். இந்த நம்பிக்கையின் வார்த்தைகளைப் பவுல் அம்மனிதருக்கு அறிவித்தார். "மனுஷரே திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்". அப்.27:25.

'நான் தேவனை விசுவாசிக்கிறேன்' என்பதுதான் அடிப்படை. நீங்கள் தேவன் சொல்லுவதைக் கேட்டு அதன்படி செய்கிறீர்களா? மனித கண்ணோட்டத்தில் அது நம்பக் கூடாததாக இருந்தாலும் நீங்கள் அவரது வார்த்தைகளுக்கு கீழ்ப்படிகிறீர்களா? தேவன் விசுவாசத்தில் பிரியப்படுகிறார். அவர்

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
Mobile: 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

"... நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை"

ஏசாயா 49:23

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ஏப்ரல் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். வாக்குத்தத்த வசனத்தைத் தொடர்ந்து இன்னும் சில வசனங்களை கீழே எழுதுகிறேன்:

"தேவனே, உமக்குக் **காத்திருக்கிறவர்களுக்கு** நீர் செய்ப வைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" *ஏசாயா 64:4.*

"கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, **காத்திருப்பேன்**" *சங்.5:3.*

".... உம்மை நோக்கி நாள்முழுதும் **காத்திருக்கிறேன்**" *சங்.25:5.*

"கர்த்தருக்காகப் பொறுமையுடன் **காத்திருந்தேன்**; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்" *சங்.40:1.*

"கர்த்தருக்குக் **காத்திருக்கிறவர்களோ** புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும், சோர்ந்து போகார்கள்" *ஏசாயா 40:31.*

நீங்கள் கர்த்தருக்கு **காத்திருக்கிறீர்களா?** "**மன்றாடு வீரர் ஆவது எப்படி?**" என்ற கட்டுரையின் ஆசிரியர், "பாடுதல், ஆராதனை நடத்துதல், பிரசங்கித்தல் போன்ற அனைத்துக் காரியங்களுக்கும் போட்டி ஏராளம்; தனிமையில் மன்றாடி ஜெபிப்பதற்கோ? அதற்கு எப்பொழுதுமே தட்டுபாடுதான்" *என்று எழுதுகிறார். ஏசாயா. 59:16;64:7.*

"**எழுப்புதல் தாமதிப்பது ஏன்?**" *என்ற புஸ்தகத்திலிருந்து சில பகுதிகளை கீழே அச்சிடுகிறேன்:*

"நாம் பிரசங்கித்துப் பிரசங்கித்துப் பின்வாங்கி போகலாம்; ஆனால் ஜெபித்து, ஜெபித்து ஒரு நாளும் ஜெய மிழக்க மாட்டோம்".

"நமது மின்னல் வேக விமானங்களைக்கூட ஆமையைப்போல தோன்றச் செய்யும் அளவு வேகத்துடன் இன்று உலகம் பாதாளப் பாதையில் பாய்கிறது. ஆயினும் அந்தோ! உலகை உலுக்கும் உயிர்மீட்சி உண்டாக கடைசியாக நாம் செய்த இராவிழிப்பு ஜெபம் எப்போது என்று நம்மில் அநேகருக்கு நினைவில்லை. நமது உருக்கம் இன்னும் உலுக்கப் படவில்லை."

நரகத்தை நடுங்கச் செய்யும், உலகத்தை உடைக்கும் ஆவிக்குள்ளான புதிய ஏற்பாட்டு ஜெபம் இன்றுபோல் என்றுமே பலரால் ஒரு சிலரிடம் மட்டும் விட்டுவிடப்பட்ட தில்லை. இவ்வித ஜெபத்திற்குப் பதிலானது எதுவுமில்லை, மன்றாடுவோம், அல்லது மடிவோம்!

****

எழுப்புதலுக்காக இதய கதறல் 2017

மாதம்	தேதி	இடம்
ஏப்ரல்	14-04-2018 2-வது சனி	**தமிழ் மெதடிஸ்ட் சபை,** மும்பை
மே	19-05-2018 3-வது சனி	**கிரேஸ் அசெம்பிளி ஆப் காட் சபை,** தஞ்சாவூர்
ஜூன்	16-06-2018 3-வது சனி	பெங்களூர்
ஜூலை	21-07-2018 3-வது சனி	**கன்மலை ஆராதனை சபை,** நெல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	18-08-2018 3-வது சனி	**விசுவாச ஜெப சபை,** கல்லக்குறிச்சி, விழுப்புரம்
செப்டம்பர்	15-09-2018 3-வது சனி	**அசெம்பிளி ஆப் காட் சபை,** தேனீ
அக்டோபர்	18-10-2018 3-வது வியாழன்	அந்தமான்
நவம்பர்	17-11-2018 3-வது சனி	திருவனந்தபுரம்
டிசம்பர்	01-12-2018 1-வது சனி	**விக்டரி அசெம்பிளி ஆப் காட் சபை,** வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.

தரிசனம் 2019 - Vision 2019

ஆண்டவருக்குச் சித்தமானால் *(யாக்கோபு 4:15) 2019-ம்* ஆண்டு, **எழுப்புதலுக்காக இதய கதறல்**

உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு, உங்கள் சபை கட்டடத்தை ஒரே ஒரு விசை திறந்து தருவீர்களா? தொடர்புக்கு: **94897 40295**

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	19-01-2019 3-வது சனி	**பிலதெல்பியா சபை,** கோயம்பத்தூர் - 5
பிப்ரவரி	16-02-2019 3-வது சனி	**CSI கிறிஸ்து சபை,** தெற்கு தாமரைகுளம், குமரி
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

(7-ம் பக்கம் பார்க்க)

காணிக்கை,கடிதங்கள், விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:	வங்கி கணக்கு எண்
வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001 **VARUKAYIN THOOTHAN** Newport Street, Nagercoil-629 001. **Mobile:** 95432 21008 **email:** Varukayinthoothan@hotmail.com	**VARUKAYIN THOOTHAN** A/c. No.:431521036 Indian Bank, W.C.C. Road, Nagercoil-1 IFS Code : IDIB000N006 வங்கி வழியாக பணம் அனுப் பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

விசுவாசம் பரலோக பொக்கிஷங்களைத் திறந்தளிக்கிறது

Faith unlocks the treasures of heaven

D.L.Moody

இயேசு, சீஷர்கள் எப்படிப் பிரசங்கிக்க வேண்டுமென்று போதிக்கவில்லை. ஆனால் அவர்கள் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக் கொடுத்தார். அவர்கள் தேவனிடம் வல்லமை பெற அவர் விரும்பினார். அப்படியானால் மட்டுமே அவர்கள் மனிதரிடமும் வல்லமையாய் செயல்படமுடியும். "உங்களின் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாத வருமாயிருக்கிற தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்" *யாக்.1:5,6.* ஆக விசுவாசம் பரலோக பொக்கிஷங்களைத் திறந்தளிக்கும் பொற்திறவு கோலாயிருக்கிறது. தாவீது கோலியாத்தை யுத்தக்களத்தில் சந்தித்த போது இதுவே அவனது பட்டயமாயிருந்தது. அவன் பெலிஸ்தியனை தேவன் தனது கரங்களில் ஒப்புக் கொடுப்பார் என விசுவாசித்தான்.

"விசுவாசம் ஒருவரை எவ்விடத்திலும் நடத்திச் செல்லுமென்றும்,தேவன் விசுவாசத்தைக் காணுமிடத்தில் அதனை கனப்படுத்துகிறார்" என்றும் ஒருவர் கூறியிருக்கிறார். அவிசுவாசம் தேவனுடைய கரத்தில் எதனையும் காண்பதில்லை. எனவே, "நான் இதைப் பெற்றுக் கொள்ள முடியாது" என்கிறது. ஆனால் விசுவாசம் அவரது கரங்களில் நன்மைகளைக் கண்டு, "நான் இதைப் பெற்றுக் கொள்வேன்" என்று கூறுகிறது.

புதுவாழ்வு விசுவாசத்தில் ஆரம்பிக்கிறது. அதன்மீது பின்பு கட்டிக் கொண்டே செல்கிறது. ஆதலால் நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். *மாற்.11:24* தேவனிடத்தில் நாம் சேரும்போது உத்தமமாயிருக்க வேண்டும்.

ஜெபத்தில் உத்தமம்

ஒரு அம்பு சிறிது இழுக்கப் பட்டால் அதிக தூரம் செல்வதில்லை. ஆனால் அது அதிகமாக இழுக்கப் பட்டால் வேகமாகச் சென்று ஆழமாக ஊடுருவும். ஆதுபோலவே சிரத்தையற்ற உதடுகளிலிருந்து வெளிவரும் ஜெபம் நமது பாதங்களினருகிலேயே நின்று விடும். ஆனால் முழு பலத்தோடும், ஆழமான வாஞ்சையோடும் பரத்திற்கு நேராக ஏறெடுக்கப்படும் ஜெபம் மேகங்களைக் கிழித்துக் கொண்டு மேலே செல்லக் கூடியது.

நமது ஜெபங்களின் எண்ணிக்கை, அணியிலக்கணம், பேச்சுவன்மை, வடிவமைப்பு, நீளம், இசைத்தன்மை, குரலின் இனிமை, தத்துவம், விவாதம், வழிமுறை, கிரமம், தெய்வீகம், நல்உபதேச அடிப்படை ஆகியவற்றை தேவன் கவனிப்பதில்லை. அவர் போராடும் முழங்கால்களை எதிர்பார்க்கிறார். நமது ஜெபங்கள் ஆவியில் ஊக்கமுள்ளதாயிருந்தால் பயனுள்ளதாயிருக்கும்.

"ஒரு அரசனுக்கு எழுதுகிற கடிதம் அழகிய கடுதாசியில் அழகிய கையெழுத்தில் எழுதுவதால் அரசரின் உணர்வைத் தூண்டுவதில்லை. அது உணர்ச்சிபூர்வமாக எழுதப்பட வேண்டும். அதுபோல இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிற ராஜாவாகிய தேவனுக்கு நமது இருதய உணர்வு தான் வேண்டும். அவர் நமது இருதயம் பேசுவதை கவனித்து கனப்படுத்துகிறார். பிற காரியங்கள் யாவும் வெளிப்படையானவை மட்டுமே" என்று ஆர்ச் பிஷப் லெய்ட்டன் கூறுகிறார்.

"வரையப்பட்ட அக்கினி அக்கினியல்ல. அது போலவே குளிர்ந்த ஜெபங்களும் ஜெபங்களல்ல. வரையப்பட்ட அக்கினியில் வெப்பம், அனல், கிடையாது. அதுப்போல் குளிர்ந்த ஜெபத்தில் அனலோ, பயபக்தியோ, ஆசீர்வாதமோ இருப்பதில்லை. அவை முனையற்ற அம்புகளைப் போலவும், கூர்மையற்ற வாளைப்போலவும், சிறகற்ற பறவை போலவும், ஊடுருவவும், வெட்டவும், பறக்கவும் முடியாதவை. குளிர்ந்த ஜெபங்கள் பரலோகத்தை அடையுமுன் உறைந்து விடும். கிறிஸ்தவர்களாகிய நாம் இந்நிலையை விட்டு விட்டு அனலுள்ள ஆவியோடு ஜெபம் ஏறெடுப்பது அவசியம்" என்று புரூக்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்.

பிறருக்காக விசுவாசத்துடன்

மத்.15:21-28 வசனங்களில் கூறப்படும் சிரபோனிக்கேயா ஸ்திரீயைப் பார்ப்போம். முதலில் அவள் இயேசுவை அழைத்த போது அவர் கவனியாதது போல் காணப்பட்டார். சீஷர்கள் அவரிடம் அவளை அனுப்பி விடும்படியாகக் கூறினர். அவர்கள் கிறிஸ்துவுடனே மூன்று ஆண்டுகள் அவருடைய பாதபடியில் கற்றிருந்தும் அவர் எவ்வளவு கிருபையுள்ளவர் என்று உணராதிருந்தனர். அவர் அவள் மீது கருணையுள்ளவராயிருந்தார். அவள் தன் மகளுக்காக 'ஆண்டவரே உதவி செய்யும்' என்று கதறினாள். இதுபோல் நமது நண்பர்களுக்காகவும் பிறருக்காகவும் அவர்களுக்குப் பதிலாக நாம் ஜெபிப்போமானால் நமது ஜெபம் கேட்கப்படும்.

பல ஆண்டுகளுக்கு முன் நான் நடத்திய ஒரு கூடுகையில் ஜெபிக்க தேவைப்படுவோர் முன்னால் வந்து முழங்காற்படியிடும்படி அழைத்தேன். அப்போது ஒரு பெண் முன்னாலே வந்தாள். அவளது முகம் சோர்புற்றிருந்தது. அவளிடம் நான் எனது அழைப்பு புரிந்ததா? தங்களைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்க விரும்புகிறவர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுத்தேன் என்றேன். அவள் பதிலாக, எனக்கு ஒரு மகன் உண்டு, அவன் தூரமாகப் போய்விட்டான். அவனுக்குப் பதிலாக நான் முழங்காற்படியிட்டு ஆசீர்வாதத்தைப் பெற வந்தேன் என்றாள். இப்படிப்பட்ட ஒரு தாயாருக்காக நான் ஆண்டவரைத் துதித்தேன்.

சிரோபோனிக்கேயா பெண்ணும் இவ்வாறாகவே வேண்டிக் கொண்டாள். ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் . இது ஒரு சிறிய ஜெபம். ஆனால் சரியாக தேவனுடைய இருதயத்தைத் தொட்டது. அவர் அவளது விசுவாசத்தை சோதித்தறிந்தார். 'பிள்ளைகளின் அப்பத்தை நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல' என்றார். அவளோ பதிலாக 'மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்'. *மத்.15:26-27* இயேசு அவளைப் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார்.

இயேசு எவ்வளவாக அவளைப் புகழ்ந்தார். அவளது விசுவாசம் பாராட்டப்பட்டது. அவள் கேட்டதைப் பெற்றுக் கொண்டாள். நாம் அனைவரும் தேவையுடையவர்கள். நாமும் ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று கேட்கலாமல்லவா! கிறிஸ்தவர்களாகிய நமக்கு அதிகமான கிருபை, அன்பு, பரிசுத்தம், நீதி ஆகியவை வேண்டுமே. இந்த ஜெபத்தை நாம் இன்றே ஏறெடுப்போம். நான் இன்னும் நன்றாகப் பிரசங்கிக்கவும் நல்வாழ்வு வாழவும், தேவ குமாரனைப் போல மாதிரியாக வாழவும் நான் விரும்புகிறேன் என்று ஜெபிப்போம். விசுவாசம் என்னும் தங்கச்சங்கிலி நம்மை தேவ சிங்காசனத்துடன் நேரடியாக இணைக்கும். அப்போது பரலோகத்தின் கிருபை நமது ஆத்துமாக்களில் பாய்ந்து வரும்.

இருதயத்திலிருந்து எழும்பும் அழுகுரல்

அந்தப் பெண் ஒரு பாவியாயிருந்திருக்கலாம். ஆனாலும் ஆண்டவர் அவள் ஜெபத்தைக் கேட்டார். நாமும் இந்தவேளை வரையிலும் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் உத்தம உள்ளத்தோடு, 'ஆண்டவரே உதவி செய்யும்' என்று கதறினால் அவர் உடனே பதிலளிப்பது நிச்சயம். ஆனால் நாமோ தவறிவிடுகிறோம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் தங்கள் நம்பிக்கையை வைக்கிறவர்களுக்கு எப்போதும் உத்தமராயிருக்கிறார்.

விசேஷித்த உற்சாகம்

"தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நிலைத்து நிற்குமிடத்தில் அவர் நம்மை சந்திப்பார்". தேவன் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்காக தேவன் பரத்தையும் உலகத்தையும் அசைக்கிறார் என்பது A.W.Tozer -ன் கருத்து.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய்மார்களே, நன்கு புரிந்து கொள்ளுங்கள், உங்கள் பிள்ளைகளிடம் இருவிதமான குரல்கள் உண்டு. அவர்கள் உங்களிடம் எதையாகிலும் கேட்கும் போது அக்குரல் நம்பவைக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். அது நம்பிக்கையின் குரலாயிருந்தால் உடனடியாக நீங்கள் உதவி செய்வீர்களல்லவா!

துயரம் நிறைந்த கூப்பிடுதல் உடனடி விடுதலையைத் தருகிறது. உங்கள் பிள்ளை விளையாடிக் கொண்டே பசிக்கிறது என்றால் நீங்கள் பதிலளிப்பதில்லை. ஆனால் விளையாட்டுப் பொருட்களை எறிந்துவிட்டு உங்களிடம் வந்து அம்மா எனக்குப் பசிக்கிறது என்றால் உடனடியாக உணவு கொடுக்க முயற்சிப்பீர்களல்லவா! அதுபோலவே பரம மன்னாவுக்காக நாம் உத்தமமாயிருந்தால் அதை நாம் பெறுவோம்.

சிலவேளைகளில் உங்கள் பிள்ளை பேசும்போது உங்கள் நண்பர்கள் அதைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் நீங்கள் அதனை எளிதில் புரிந்து கொள்ளுவீர்கள். அது போல நமது இருதயங்களிலிருந்து எழும்பும் உண்மையான ஜெபம் தேவனால் புரிந்து கொள்ளப்படும். மிக அழகிய அல்லது சரளமான ஜெபம் மட்டுமே பதிலைக் கொடுக்கும் என்று எண்ண வேண்டாம். பாரம் நிறைந்த இருதயத்திலிருந்து எழும் ஜெபம் தேவை.

ஜெபிக்கும்போது பெற்றுக் கொள்வோம் என்று எதிர்பாருங்கள். நூற்றுக்கு அதிபதி தனது வேலைக்காரன் சுகம் பெற்றுக் கொள்ள ஆண்டவரிடம் சென்று கேட்க தான் தகுதியற்றவன் என்று எண்ணி நண்பர்களை அனுப்பு கிறான். லுக்.7:2-10 அவர்கள் இயேசுவை சந்தித்து போதகரே வருத்தப்பட வேண்டாம், ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், நோய் குணமாகும் என்று கூறினர். இயேசு யூதர்களைப் பார்த்து, 'இஸ்ரவேலருக்குள்ளும் இத்தகைய விசுவாசத்தை நான் காணவில்லை' என்று சொன்னார். அந்த நூற்றுக்கதிபதியின் விசுவாசம் அவரை பிரமிப்படையச் செய்தது. இயேசு சந்தோஷப்பட்டார். அந்த வேலைக்காரன் அப்பொழுதே சுகமடைந்தான். விசுவாசம் பதிலைக் கொண்டு வந்தது.

யோவான். 4:46-53 வசனங்களில் ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தானென்றும் தகப்பன் இயேசுவிடம் வந்து பணிந்து கொண்டு, தன் குமாரன் சாகுமுன் வரும் படி விசுவாசத்துடன் கெஞ்சியபோது உடனே அந்த ஜெபம் கேட்கப்பட்டது, அவனது விசுவாசம் கனப்படுத்தப் பட்டது.

எனவே இயேசுவின் கரம் அற்புதங்களை நிகழ்த்துகிறதற்கு விசுவாசம் தேவையாயிருக்கிறது. (மத். 21:21-22 படிக்க)

விசுவாசம் என்னும் கேடயம்

The shield of faith

Charles H.Spurgan

" ..... எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாகவும் நில்லுங்கள்" எபே.6:16.

விசுவாசம் ஒரு கேடகத்தை போல நம்மைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கிறது. இப்பகுதியில் கூறப்பட்டிருக்கும் கேடகம் ஒரு கதவைப்போல பெரியது. மனிதனை முழுவதுமாக அது மறைத்துக் கொள்ளும். சங்.5:12-ல் "கர்த்தாவே நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்து கொள்ளுவீர்" என்று படிக்கிறோம். கேடகம் முழுமனிதனையும் சூழ்ந்து பாதுகாக்கிறபடியால் எப்பக்கத்திலிருந்து வரும் தாக்குதல்களையும் சமாளிக்கக் கூடியது.

விசுவாசம் முழு மனிதனையும் பாதுகாக்கிறது. தலைப்பகுதிக்கு நேராக சத்துரு தாக்கினாலும், வேதபுத்தக அடிப்படைக் கருத்துக்களை அவன் குழப்பினாலும் நாம் பெற்றுக் கொண்ட வாழ்வை சந்தேகிக்கச் செய்தாலும் முழுமையான விசுவாசம் இவை எல்லாவற்றிற்கும் எதிராக உறுதியாக நிற்கச் செய்கிறது. விசுவாச பெலவீனத்தால் குழப்பமான உபதேசங்கள் எழும்புகின்றன. கிறிஸ்துவில் உறுதியான விசுவாசமுடையவன் கிருபையின் உபதேசங்களில் உறுதியான பற்று கொண்டிருப்பதால் எவ்விதத்திலும் அந்தப் பற்று தளர்வதில்லை. அவனது நம்பிக்கையை அவன் நன்கு அறிவான். அவன் பெற்றுக் கொண்டவைகளையும் அவன் புரிந்து கொள்ளுவான். தேவ சத்தியம் என்று அவன் அறிந்தவைகளை, மனிதர் எவ்வளவு முயன்றாலும், திட்டங்களைத் தீட்டினாலும் அவன் விட்டுவிட முடிவதில்லை. அவன் விட்டுவிடவே மாட்டான்.

விசுவாசம் தலையைப் பாதுகாப்பது போல இருதயத்தையும் பாதுகாக்கிறது. உலகத்தை நேசிப்பதற்கான சோதனை வரும்போது விசுவாசம் தேவ ஜனங்களுக்கு ஆயத்தப்படுத்தப் பட்டிருக்கும் பலனைக் குறித்த எண்ணங்களை உறுதியாகப் பற்றிக் கொள்ளச் செய்கிறது. கிறிஸ்து அனுபவித்த பாடுகளை எகிப்தின் பொக்கிஷங்களை விட மேலாக கருதச் செய்கிறது. இவ்வாறு இருதயம் பாதுகாக்கப் படுகிறது. சத்துரு கிறிஸ்தவனின் கரத்திலிருக்கும் பட்டயத்தை வெட்டி சேவை செய்யத் தடை பண்ணினால் விசுவாசம் கரத்தை ஒரு கேடயமாகப் பாதுகாக்கிறது. அவன் தன் எஜமானுக்காக முன்னேறி தேவ நாமத்திலே மேற் கொண்டு கொள்ளையைப் பெற்றுக் கொள்ள உதவும்.

தீயோனின் அம்பு கால்களுக்கு நேராகச் செலுத்தப்பட்டு அனுதின வாழ்விலே தனது நேர்மை நடக்கை மற்றும் சம்பாஷனை போன்றவற்றில் தவறாக நடத்த முயற்சித்தால் விசுவாசம் பாதங்களைப் பாதுகாக்கிறது. அவன் சறுக்கலான இடங்களிலும் பத்திரமாக நிற்க முடியும். அவனது பாதங்கள் இடறுவதுமில்லை, சத்துரு அவனை மேற்கொள்ளுவதுமில்லை.

சாத்தானின் அம்பு முழங்காலைத் தாக்க முயற்சிக்கும்போது அதாவது ஜெபத்தில் அவனை பெல வீனப்படுத்த, தேவன் அவனது சத்தத்தைக் கேட்பதில்லை, அவர் அவனது ஜெபத்திற்கு ஒருபோதும் பதிலளிப் பதில்லை என்று கூறும் வேளைகளில் விசுவாசம் அவனது முழங்கால்களை பாதுகாக்கும். விசுவாசத்தின் வலிமை யால் உறுதியோடு தேவனுடைய கிருபாசனத்திற்கு நேராக கடந்துவரச் செய்கிறது. அம்பு அவனது மனச் சாட்சிக்கு நேராக செலுத்தப்பட்டால், அவனது சமீப கால பாவத்தை நினைவு படுத்தினால், விசுவாசம் மனசாட்சியைப் பாதுகாத்து அவன் பெற்றுக் கொண்ட பாவ நிவாரணத்தின் முழு நம்பிக்கை யையும் அளித்து அக்கினி அஸ்திரங்களைத் தணித்துவிடுகிறது. அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. 1யோ.1:7. எனவே கிறிஸ்தவனின் எந்தப் பகுதி யையும் சாத்தான் தாக்க முடியாது.

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்

விசுவாசம் மனிதனை முழுவ துமாக பாதுகாப்பதோடு அவனது ஆயுதங்களையும் பாதுகாக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடு கிறார். அனைத்து ஆயுதங்களையும் குறிப்பிட்ட பின்பு அவர் 'எல்லாவற் றிற்கும் மேலாக' என எழுதுகிறார். தேவ மனிதன் இடைக்கச்சையையும் மார்க் கவசத்தையும் தரித்துக்கொள்ள வேண்டும். பாதரட்சை, தலைச்சீரா போன்றயாவையும் அவன் அணிந்திருக்க வேண்டும். இவற்றிற்கு மேலாக விசுவாசம் பாதுகாவலுக்கு மேலான பாதுகாவலாயிருக்கிறது. விசுவாசம் மனிதனை மட்டுமல்ல அவனது கிருபை களுக்கும் கேடகமாயிருக்கிறது. நம் மிடம் காணப்படும் நற்குணங்கள் தானே நம்மில் காணப்பட முடியாது. அவை பாதுகாக்கப்பட கிருபை மிக அவசியம். அந்தக் கிருபை விசுவாசத்தின் மூலம் நமக்கு அருளப்படுகிறது. நாம் அணிந் திருக்கும் அனைத்து ஆயுதங்களும் அவற்றை மூடிப் பாதுகாக்கிற, சகல வெற்றிக்குரிய விசுவாசம் என்னும் கேடகத்தால் மூடப்பட வேண்டும்.

இரண்டாவதாக விசுவாசம் கேடகமாயிருக்கும் போது அந்த மனிதன் பெற்றுக் கொள்ள வேண்டிய அடிகளை அது பெற்றுக் கொள்கிறது. சில கிறிஸ்தவர்கள் விசுவாசம் தங்களை அடிகளுக்குத் தப்புவிக்கிறது. அதினால்

எல்லாவற்றிலும் அமைதியாகவும் சமாதானமாகவும் இருக்கலாம் என்று எண்ணுகிறார்கள். பொதுவாக வாலிப கிறிஸ்தவர்கள் இவ்வாறு எண்ணுகிறார்கள். அவர்கள் தாங்கள் முதலாவது பாவ உணர்வடைந்து இரட்சகரைக் கண்டடைந்தவுடன் பரலோகத்திற்கு இன்ப சவாரி செய்வதாக மனோபாவனை செய்து கொள்கிறார்கள். போர்களில்லை யென்றால் போராயுதங்களை ஏன் தரிக்க வேண்டும்? கடைசி முனைவரை கடின மாக உழுவதால் வியர்வை சிந்த முடியா விட்டால் கலப்பையில் ஏன் கைவைக்க வேண்டும்? யுத்தத்திற்குப் போகா விட்டால் ஏன் உங்கள் பெயரைப் பதிவு செய்ய வேண்டும்? பொதுமக்களின் சேவைக்காக சம்பளம் வாங்கும் போர் வீரர் வீட்டில் சுகமாகத் தங்கலாமா? அல்லவே அல்ல. யுத்தம் வந்தவுடன் வீரன் போருக்கு ஆயத்தமாக வேண்டும். யுத்தம் தனது பதவியின் ஒரு முக்கிய பகுதி என்பதை அவன் எதிர்ப்பார்க்க வேண்டும். ஆனால் அடிகளை ஏற்றுக் கொள்ள விசுவாசம் தேவை. கேடகம் உறுதியாயிராவிட்டால் தாக்குதலின் போது சிதைந்துவிடும். அடிக்கு மேல் அடிகள் வந்தாலும், மரணமே நேரிட்டா லும் உறுதியான கேடகம் அவற்றை யெல்லாம் தாங்கும். அதுபோல் நமது விசுவாசமும் அடிகளையும் அழுத்தங் களையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமா யிருக்க வேண்டும்.

உங்களோடிருக்கும் சேனைத் தலைவரின் பெயரால் முன்னேறிச் செல்லுங்கள். எந்த ஒரு ஆயுதமும் உங்கள் கேடகத்தை ஊடுருவ முடியாது. அது அனைத்து யுத்தங்களிலும் உங்களைப் பாதுகாத்து முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவரால் ஜெயம் பெறுவீர்கள்.

மூன்றாவதாக விசுவாசம் மிகவும் உறுதியாயிருக்க வேண்டும். மெல்லிய பொருட்களாலான கேடகத்தை ஒருவன் பயன்படுத்தினால் எதிரியின் வாள் அதை ஊடுருவி அவன் இதயத்தைத் தாக்கி விடும். எனவே கேடகத்தை பயன் படுத்துகிறவன் அது உறுதியுடையதா என கவனித்துக் கொள்வது அவசியம்.

நமது விசுவாசம் சரியானதா? நமது கேடகம் உறுதியானதா? என அறிந்து கொள்வது எப்படி? இதற்கான ஒரு பரிசோதனை அது ஒரே துண்டாக (இணைப்புகளற்று) இருக்க வேண்டும். இரண்டு மூன்று துண்டுகளால் இணைக் கப்பட்ட கேடகம் பயனற்றது. உங்கள் விசுவாசம் கிறிஸ்துவினுடைய முடிவு பெற்ற பணி ஒன்றின் மேலேயேயிருக்க வேண்டும். உங்களிலோ, வேறு எந்த மனிதரிலோ உங்கள் நம்பிக்கை இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் உங்கள் விசுவாசம் பயன்படாது. உங்கள் கேடகம் பரலோக பட்டறையில் செய்யப்பட்டதாயிருக்க வேண்டும். அல்லாவிட்டால் அது உங்களை ஏமாற்றி விடும். தூய ஆவியானவரின் செயல்பாடு உங்களில் காணப்பட வேண்டும். உங்கள் விசுவாசம் சத்தியத்தை அடிப் படையாகக் கொண்டிருக்க வேண்டும். அதில் எந்த தவறான கருத்துக்களும் இணைக்கப்பட்டால் அது பலம் இழந்து போகும். உங்கள் விசுவாசம் தேவனு டைய வசனத்திற்கு ஒத்ததாயிருக்க வேண்டும். அதன் மூலம் அவருடைய உண்மையான வாக்குகளையும் சாட்சி களையும் சார்ந்து வாழ முடியும். இல்லாவிட்டால் கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போக நேரிடும். எல்லாவற் றிற்கும் மேலாக உங்கள் விசுவாசம் கிறிஸ்துவின் நபரத்துவத்தின் மீது கட்டப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்து வின் தெய்வீக நபரத்துவம் முக்கியத் துவம் பெறவேண்டும். "கிறிஸ்து என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப் பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்" ரோமா.9:5. அவர் மனிதனாக வந்து பஸ்காவின் தேவ ஆட்டுக்குட்டியாக நமக்காக பலியானார். எந்த ஒரு விசுவாசமும் இதற்கு எதிராக நிற்க முடியாது. ஏனெனில் ஆவிக்குரிய வாழ்வில் வரும் எந்த தாக்குதலையும் வேறு எந்த விசுவாசமும் எதிர்த்து நிற்க முடியாது. விசுவாசம் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டால் மட்டுமே கேடகமாயிருக்க முடியும்.

கேடகம் உபயோகப்படுத்தப் படுவது போல விசுவாசமும் பயன் படுத்தப்பட வேண்டும். யுத்தக் களத்தில் நிற்கும் போர்வீரன் தனது கேடகம் வீட்டிலிருப்பதாகக் கூறுவது எவ்வளவு மதியீனமானது. இதுபோலவே அனேகர் தங்களிடம் விசுவாசம் இருப்பதாகக் கூறியும் தேவையான வேளையில் அது அவர்களிடமிருப்பதில்லை. விரோதிக ளில்லாத வேளையில் அவர்களிடம் விசுவாசமுண்டு. சூழ்நிலைகள் நன்றா யிருக்கும் போது அவர்களால் விசுவாசிக்க முடியும். ஆனால் நெருக்கங்கள் வரும் போது அவர்கள் விசுவாசத்தில் தவறி விடுகின்றனர்.

கேடகத்தை பயன்படுத்துவதில் ஒரு புனிதமான கலையுண்டு. சத்துரு தாக்கும் போது தேவ வாக்குத்தத்தங் களை குறிப்பிட்டு கேடகத்தை பயன் படுத்த வேண்டும். சாத்தான் ஒரு விசுவாசியிடம் 'நீ ஒருநாள் ஏழையாகி பட்டினியாயிருப்பாய்' என்று சொன்ன போது அந்த விசுவாசி கேடகத்தைப் பிடித்துக் கொண்டு, 'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' எபி.13:5, "அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும், அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்" ஏசா.33:16 என்ற வாக்குத் தத்தங்களைக் கூறி வெற்றிபெற்றான்.

"ஆனால் ஒருநாள் சத்துருவின் கரத்தில் விழுந்து போவாய்" என்று கூறியபோது "விசுவாசம்" உங்களில் நற்கிரியையைத் தொடங்கியவர் அதை இயேசுக் கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பு கிறேன் பிலி.1:5 என்று விடையளித்தது.

மேலும் "சத்துருவின் பழிச்சொல் உன்னை இடறச் செய்யும்" என்று சாத்தான் சொன்னபோது விசுவாசம் அல்ல, மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும், மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர் சங்.76:10 என்ற வசனத்தால் வெற்றி பெற்றது.

சாத்தானின் அடுத்த அம்பு, நீ மிகவும் பெலனற்றவன் என்பதாகும். பதிலாக விசுவாசம் கேடகத்தைப் பிடித்துக்கொண்டு, பெலவீனத்திலே என் பெலன் பூரணமாக்கப்படும். கிறிஸ்து வின் பெலன் என்மேல் தங்கும்படி எனது பெலவீனத்திலே மேன்மை பாராட்டு வேன் 2கொரி.12:9 எனக்கூறி மேற் கொண்டது.

சத்துரு மறுபடியும், வாளை உருவிக் கொண்டு, பாய்ந்து வந்து, 'ஆனால் தேவனே உன்னை விட்டு விட்டார்' என்று கூறியதற்கு, விசுவாசம், அல்லவே அல்ல என்று கூறி சங்.94:14-ம் வசனத்தையும் குறிப்பிட்டது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடா மலும், தம்முடைய சுதந்திரத்தைக் கைவிடாமலும் இருப்பார்.

சாத்தான் இறுதியாக 'நீ எனக்குச் சொந்தம்' என்று கூற விசுவாசம் அல்ல யோவா.10:28-ன் படி "நான் அவை களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கி றேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வது மில்லை" என்று பதிலடி கொடுத்தது. கேடகத்தை எப்படி பயன்படுத்துவது என கற்றுக் கொண்டோம்.

அதிகமாக உற்சாகப்படுத்துங்கள்

எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமாகிய கேடகத்தைப் பிடித்துக் கொண்டு எல்லாவற்றிற்கும் மேலாக நமது விசுவாசம் இருப்பதால் நமது விசுவாசம் சரியானதாக இருக்கிறதா உண்மையானதா அது நம்மை எல்லாவித தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்குமா என்பதை கவனித்துக் கொள்ள வேண்டும்.

உண்மையான விசுவாசத்தின் தேவையைக் கற்றுக் கொண்டோம். கேடயம் எல்லாவித அக்கினி அஸ்திரங் களையும் தணிக்கும் வல்லமையுடையது. முற்காலத்தில் மக்கள் சிறிய அம்புகளை பயன்படுத்தி வந்தனர். அவை இலேசான வைகளாகவும் நச்சில் நனைக்கப்பட்ட வைகளாகவுமிருந்தன. அவை அக்கினி அம்புகள் என அழைக்கப்பட்டன. ஏனெனில் அவை சரீரத்தைத் தொட்ட வுடன் அல்லது தோலினருகில் வந்ததும் அவை இரத்தக் குழாய்களில் அக்கினி போன்ற நச்சை ஏற்படுத்தும். சிலவேளை களின் நுனியில் விரைவில் பற்றியெரியக் கூடிய திரவம் தடவப்பட்டிருக்கும். அவை பாய்ந்து செல்லும்போது எரிந்து எதிரிகளின் கூடாரங்களை எரித்து வீடுகளையும் பட்சித்துப்போடும். விசுவாசத்திற்கு முன்பாக இப்படிப் பட்ட அம்புகளாகிய சோதனைகள், தேவதூஷணங்கள், மறைமுகமான சொற்கள் நச்சுத்தன்மையோடு அக்கினி போல வந்தாலும் அதன் வலிமைகளைத் அது தணிக்கக் கூடியது.

விசுவாசம் ஒன்றே சர்வாயுத வர்க்கத்தில் அம்புகளைத் தடுக்கக்

கூடியது. விசுவாசம் அனைத்து அம்பு களையும், தாக்குதல்களையும் தடுத்து நம்மை பாதுகாக்கக் கூடியது. அது எல்லாவற்றிற்கும் உபயோகமானது. பெலவீனரை அது பலப்படுத்தும், அறிவீனருக்கு அறிவைக் கொடுக்கும், கோழைகளை வீரமுள்ளவர்களாக்கும். விசுவாசம் பயன்படாத எந்த சந்தர்ப்ப முமில்லை. எனவே உங்களது விசுவாசத் தை கவனித்துக் கொள்ளுங்கள். எல்லா வற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைத் பிடித்துக் கொள்ளுங்கள்.

முற்கால கிரேக்கர்களின் போர் களில் எதிரி அதிக அருகில் வந்து கேடகத்தைத் தள்ளிவிட்டுத் தாக்க முயலுவார்கள். அது போலவே சாத் தானும் நமது கேடகத்தை அகற்றிவிட்டு நம்மைக் கொல்ல முயற்சிப்பான். விசுவாசத்தை நழுவ விட்டுவிடாதீர்கள். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னா ரென்று அறிவேன். அவர் முடிவு மட்டும் என்னைக் காக்க வல்லவர்" என்று சொல்லுவோம்.

பூர்வகால பக்தர்கள் ஒருபோதும் சந்தேகப்படவில்லை. சாலொமோன், "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவன் என்றார்". நான் உனது இரட்சிப்பு என்று எனது ஆத்துமாவுக்குச் சொல்லும் என்று தாவீது குறிப்பிட்டார். மேலும் ஆண்டவர் என் இரட்சிப்பு, கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் என்றும் அவர் பாடியிருக்கிறார். யோபு, என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்பதை நான் அறிவேன் என்றார். பவுல் தன் விசுவாசத்தைப் பல்வேறு இடங்களில் காண்பித்திருக்கிறார். நாம் ஏன் அவர்களைப் போன்ற விசுவாச வீரர்களாயிருக்க முடியாது? நாம் விசுவாச கேடகத்தைப் பிடிப்போம்.

தேவனால் எல்லாம் கூடும்

With God all things are possible

A.B. Simpson

கூடாதவைகளுக்காக ஜெபம் பண்ணுங்கள். இது விசுவாசம் மற்றும் பரலோக ராஜ்யத்திற்குரிய மொழி. தேவன் கடினமானவைகளை விரும்பு கிறார். மிகக் கடினமானவைகளையும் பெலமானவைகளையும் எளிதாக மாற்றுவது தேவனுடைய மகிமையைக் காண்பிக்கிறது.

தமது ஒரு மிகப்பெரிய அற்புதத் தை வாக்களித்த போது ஒரு முற்கால தீர்க்கர் மூலமாக இப்படிக் கூறினார். இது கர்த்தரின் பார்வைக்கு அற்பக்காரியம் 2ராஜா 3:18. மாற்.2:9-ல் கூறப்பட்டுள்ள திமிர்வாதக்காரனை இயேசு சொஸ்த மாக்கியபோது, எது எளிது? என்று கேட்டார். எந்தக் கடினமான காரியமும் அவருக்கு எளிது.

தேவன் செய்த பலத்த கிரியைக ளெல்லாம் கூடாதவை என கருதப் பட்டவை. ஒன்றுமில்வாய்மையிலிருந்து இவ்வுலகம் படைக்கப்பட்டது. மீட்பு என்பது ஒரு மிகப்பெரிய கடினமான காரியத்தை மேற்கொள்வதாகும். இது எந்த மனித ஞானத்தாலும், வலிமை யாலும் கூடாதது.

இரட்சிப்பைக் குறித்து இயேசு மனிதரால் இது கூடாததுதான். ஆனால் தேவனால் எல்லாம் கூடும் என்று சொல்லியிருக்கிறார். மத்.19:16-26 அசுத்தமான ஆத்துமாவை சுந்திகரிப்பது கூடாதது. அசுத்தமானதிலிருந்து சுத்த மானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண் டோ? ஒருவனுமில்லை யோபு.14:4.

விசுவாசிகளின் தந்தையாகிய ஆபிரகாம் பெற்ற வாக்குத்தத்தங்கள் கூடாதவைகள். எபி.11:8-12 வசனங் களின்படி அவன் சரீரம் செத்தது போன்ற நிலையில் தேவன் அவனை அழைத்து ஒரு குமாரன் பிறப்பான் என்பதை நம்பச்செய்து வயது முதிர்ந்த நிலையில் ஈசாக்கைக் கொடுத்து தமது வாக்கை நிறைவேற்றினார்.

இஸ்ரவேல் மக்களின் விடுதலை மிகவும் நம்பிக்கையற்ற நிலையில்தான் கிடைத்தது. தேவன் கூடாத காரியங் களை நமது அவசர நிலைகளில் சாத்திய மாக்குகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பல வருடங்களைக் கழித்தது ஒரு அற்புதம்.

யோசபாத்தின் மிகப் பெரிய வெற்றி அவன் கலங்கித் தவித்து உதவியற்று எங்களுக்கு விரோதமாக வந்த "... எங்களுக்கு... பெலனில்லை... எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது" என்று ஜெபித்த போது உதவி வந்தது. தாவீது ராஜ்யத் தைப் பெற்றுக் கொள்ளுமுன் மிகவும் நெருக்கப்பட்டான். தெய்வீக வல்லமை மட்டுமே அவனை உயர்த்தியது.

2ராஜா.20:1-6 வசனங்களில் வரும் எசேக்கியா ராஜாவின் வாழ்வு முடிவடையப் போகும் தருவாயில் குணமாக்கப்பட்டான் என வாசிக்கி றோம்.

தானி.6:12-22 வசனங்களில் தானியேலை சிங்கக் கெபிக்கு தப்புவிக்க தரியு ராஜா சூரியன் அஸ்தமிக்கும் மட்டும் பிரயாசப்பட்டும் முடியவில்லை. ஆயினும் அதிசயமாக அவன் தப்புவிக்கப் பட்டான்.

எஸ்தர் 9:25-32 வசனங்களில் ராஜா ஏற்படுத்தின மாறாத பிரமாணத் தின்படி கொல்லப்பட வேண்டிய யூத மக்களை தேவன் எஸ்தர் மூலமாக பாதுகாத்தார்.

எரேமியா சிறையின் உள் அறை யில் அடைக்கப்பட்டிருந்த போது மிகப் பெரிய வாக்குத்தத்தம் அவனுக்குக் கிடைத்தது. கல்தேயர் நகரத்தின் மதிலைச் சூழ்ந்திருந்தனர். உலக பிரகார மான நம்பிக்கை அற்றுப் போயிற்று. ஆயினும் மக்களுக்கு முன்பாக அவன் வந்து ஆனதோத்தின் நிலத்தை வாங்கிக் கிரயப்பத்திரத்தை மண்பாண்டத்திலே பத்திரப் படுத்தினான். எரே.33:1-5.

இயேசு கூறிய ஒரு இனிய உவமை பாதிராத்திரியில் ஒருவன் நண்பனிடம் அப்பம் கேட்க வந்தது. உணவு பரிமாறும் நேரம் முடிந்து விட்டது. வீடு அடைக்கப்பட்டது, குடும்பம் படுக்கையில் இளைப்பாறும் நேரம். உதவி கிடைக்க மிகவும் பிந்திய ஒரு நேரம். ஆயினும் நண்பன் எழுந்து வந்து நண்பனுக்கு வேண்டிய உதவியைச் செய்தான். லூக்.11:1-13.

2கொரி.1:8-10 வசனங்களில் பவுல் பிழைப்போம் என்ற நம்பிக்கையற் றிருந்த போது விசுவாசத்தின் மூலம் வெற்றி பெற்றதைப் பார்க்கிறோம்.

மேற்கூறிய எடுத்துக்காட்டு களைப் படித்த நாம் கூடாதவைகளுக் காக ஜெபிக்கத் தயங்க வேண்டிய தில்லை.

"நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்றார். மாற்.9:23 "கடுகுவிதை அளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம்பாம். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது" மத்.17:20.

மனித உதவியைப் பெற முடியாத யாரேனும் உங்கள் உறவின ரோ நண்பர்களோ இருக்கின்றனரா? கூடாத அக்காரியத்திற்காக ஜெபியுங் கள். உங்களால் மேற்கொள்ள முடியாத ஏதேனும் சோதனைகள் இருக்கிறதா? அதற்காக ஜெபியுங்கள்.

உங்கள் சரீரத்திலுள்ள ஏதேனும் பெலவீனத்தால் நீங்கள் பயன்பட முடியாத நிலையிலிருக்கிறீர்களா? அந்தக் கூடாத காரியத்திற்காக ஜெபியுங்கள். வாழ்க்கையில் சோதனைகளும் நெருக்கங் களும் காணப்படுகிறதா? மனித வலிமை யால் அவை நீக்கப்பட முடியவில்லை யா? தேவனால் கூடாதது ஒன்றுமில்லை, ஜெபியுங்கள்.

தேவனுக்காகக் கடுமையாக உழைக்கிறீர்களா? போதுமான ஆதாரங் களில்லையா? போதுமான பெலனில்லை யா? உயர்ந்த விசுவாசமும் பெலனுள்ள கரமும் அதைச் செய்ய முடியவில்லை யா? தேவன் கடின உழைப்பை விரும்பு கிறார். 1கொரி.1:26-31 வசனங்களின்படி பெலமுள்ளவைகளை அதமாக்கும்படி தேவன் பெலவீனமான வைகளைத் தெரிந்து கொண்டார். எனவே கூடா தவைகளுக்காக ஜெபியுங்கள். பின்பு சந்தோஷமான இருதயத்தோடு இவ்வாறு பாடுங்கள்.

இயேசுவுக்கு எதுவுமே கடின மானதில்லை

அவரைப்போல எவரும் பணி செய்யவும் முடிவதில்லை.

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரிவியுங்கள். இது நீங்கள் எங்களுக்கு செய்யும் பெரிய உதவியாகும்.

விசுவாசம் கிரியை செய்ய துதிக்க வேண்டும்

Praise is Faith at work

Wesley L.Duewel

நீங்கள் தேவனைத் துதிக்க ஆரம்பிக்கும் போது விசுவாசம் பெருகுகிறது. சிலவேளைகளில் மன்றாடுவதை விட துதிப்பது முக்கியமாகிவிடுகிறது. துதி உங்கள் கண்களை, சூழ்நிலைகளை விட்டுவிலக்கி சர்வவல்ல தேவனுக்கு நேராக உயர்த்துகிறது. எந்த ஒரு சூழலும். அவரை அறியாது நமக்கு வருவதில்லை. அவற்றிற்கு அவர் ஒரு போக்கை உண்டு பண்ணி அவரது நாமத்திற்க்கு மகிமையாகவும் நமது நன்மைக்கு ஏதுவாகவும் மாற்றி விடுகிறார்.

துதி நமது பார்வையை யுத்தக் களத்திலிருந்து வெற்றிக்கு நேராக செலுத்துகிறது. ஏனெனில் கிறிஸ்து வெற்றி வீரர். நாம் இவற்றை அவரது பாதங்களுக்கடியில் பார்க்க முடியாவிட்டாலும் அவை தெய்வீக உண்மைத் துவத்துடன் காணப்படுகின்றன. எபி.2:8; எபே.1:22 விசுவாசம் தேவையா! தேவ வசனத்திற்குச் செல்லுங்கள். பின்பு அவரைத் துதியுங்கள். இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. கவலைப்படாமலும், பயப்படாமலும் துதிக்க முயற்சியுங்கள்.

துதி ஆராதனைக்கு இணையானது.

ஒரு புதிய சந்தோஷத்தின் ஊற்று உங்கள் ஆத்துமாவில் வேண்டுமா, துதிக்க ஆரம்பியுங்கள். தேவ வசனம் அவர் ஒரு பாட்டை நமது இருதயத்தில் தருவதாகக் கூறுகிறது. நாம் பாடித் துதிக்கிற கிறிஸ்தவர்களாயிராவிட்டால் தேவனை ஏமாற்றமடையச் செய்கிறோம். சங்.100:4-ன் படி அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரிக்க வேண்டும். தூய ஆவியானவரின் கிருபைகள் அனைத்தும் மகிழ்ச்சியான இருதயத்தில் நன்கு வளருகின்றன.

எந்த இக்கட்டான நிலையிலும் தேவன் ஆத்துமாவைப் புதிய விதத்தில் சந்திக்கிறார். அவர் அளவில்லாத சந்தோஷத்தையும், புதிய சமாதானத்தையும், மகிமையின் தொடுதலையும் அளிக்கிறார். நீரானது நீரூற்றிலிருந்து புறப்பட்டு பாய்ந்து செல்வது போல துதியும் தானாக எழும்பும். அந்தகாரத்தின் மேகங்கள் தேவனுடைய அன்பின் முகத்தை மறைக்கும் போது துதி அதிவிரைவாக அவரது மகிமையின் ஒளிக்கு திரும்ப எடுத்துச் செல்லும். உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் சந்தோஷம் குன்றி விட்டதா? உங்களில் ஏதோ மறைக்கப்பட்ட பாவம் இருக்கிறது. துதிக்க ஆரம்பியுங்கள் துதியுங்கள்.

நமது ஜெபங்களுக்குரிய பதில் சில வேளைகளில் தாமதிப்பதாக உணருகிறீர்களா? அது நமது துதியின் குறைவினால் தான். தேவன் அனேக கஷ்டங்களையும் தடைகளையும் நம் வாழ்வில் மாற்றித் தந்திருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் துதி என்றால் மிகையல்ல. பிற வழிகளைவிட சாத்தானை விரைவாகத் துரத்த உதவியது துதியல்லவா? துதி, உபவாசம் ஆகியவற்றை அனுபவித்துப் பார்த்திருக்கிறீர்களா? உடலுக்கு ஆரோக்கியமும், பிசாசிலிருந்து விடுதலையும், கலங்கிய உள்ளங்களுக்கு சமாதானமும், கர்த்தரைத் துதிப்பதாலும் ஏற்படுவதை அறிந்திருக்கிறீர்களா?

கூடாதது என்பது போன்ற சூழலில் துணிந்து துதியின் மூலம் தேவனுடைய அற்புதத்தைக் கண்டிருக்கிறீர்களா? பசி, தாகம் நிறைந்த தடுமாறும் தேவ பிள்ளையே, அந்தகார சக்திகளோடு போராடிக் கொண்டிருக்கும் தேவபிள்ளையே, மன்றாடிக் கொண்டிருக்கும் ஜெப வீரரே இது உங்களுக்கு தேவன் அளிக்கும் செய்தி. இப்போதே தேவனை நோக்கிப் பார்த்து துதிக்க ஆரம்பியுங்கள், தேவனைத் துதியுங்கள்.

ஆவிக்குரிய போராட்டத்தில் நாம் போதிய அளவு ஜெபமின்றி பிரவேசிப்பதில்லை. ஆனால் 2நாளா.2:20-21 வசனங்களின்படி போருக்குச் செல்ல யோசபாத் விசுவாசத்தோடு துதித்து முன்னேறுவதைக் காணலாம். எனவே தேவனை இன்னும் அதிகமாகத் துதிப்போம். துதி சூழ்நிலைகளை மாற்றும். துதி உங்களையே மாற்றிவிடும்.

துதியில் ஆழமான தியாகம் காணப்படுவதுண்டு நமது கண்கள் கண்ணீரை சொரிந்து கொண்டிருக்கும் போதும் துதிக்க வேண்டிய சமயங்கள் வரலாம். யோபுவைப் போல கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் யோபு.1:21 என்று மட்டுமே சொல்லக் கூடியதாயிருக்கலாம். பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஒருவருடைய இருதயத்திலிருந்து எழும்பும் துதியை விட இனிய இசையோ நறுமண திரவியமோ உலகிலெங்குமில்லை.

நீங்கள் சந்திக்கும் சூழ்நிலைகள் நீங்கள் தெரிந்து கொண்டவைகளல்ல. ஆயினும் உங்கள் கெத்செமெனே அனுபவத்தில் தேவனைத் துதிக்கிறீர்களா?

துதி என்பது பரலோக மொழி

துதி தொடுகிறவைகளெல்லாம் இனிமையும் தூய்மையும் பெறும். துதி புதிய விசுவாசத்தைத் தூண்டி எழுப்பும். மங்கி எரிந்து கொண்டிருக்கும் உங்கள் அன்பின் பொறிகளை தேவ அன்பாகப் பற்றி எரியச் செய்யும். மகிழ்ச்சியின் மணியோசை துதியின் மூலம் உங்களில் ஒலிக்க ஆரம்பிக்கும். அந்தப் பாடலில் பரலோகம் முழுவதும் இணைந்து, பரலோகமே உங்கள் இருதயத்தைத் தொடும். துதி இருளை ஊடுருவிச் செல்லக் கூடியது. உறுதியான தடுப்புச் சுவர்களை துதி நொறுக்கும். அதனால் சாத்தானுடைய இருதயம் பயத்தால் நடுங்கும்.

இதுவரை நாம் தேவனைக் குறைவான அளவிலே துதித்திருக்கிறோம். மட்டுமல்ல எப்போதாவது துதிக்கிறோம். நாம் இன்னும் அதிகம் அதிகமாகத் துதிப்போம். கடந்த காலத்தில் அவரைத் துதித்தது போதாது. வாருங்கள் இப்போதே அவரைத் துதிப்போம். பரலோகத்தை நோக்கிப் பாருங்கள். இப்பொழுதே வல்லமை யுள்ள மீட்பரைத் துதியுங்கள். அவருடைய அன்புக்காகவும் அவருடைய உண்மைக்காகவும் அவரைத் துதியுங்கள். அவரது வல்லமைக்காகவும் அவரது நற்குணத்திற்காகவும் அவரைத் துதியுங்கள். துதிக்குப் பாத்திரர், அவரை நாம் எப்போதும் துதிப்போம்.

வாசகருக்கு எனி அன்பு .....(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்தர் ராஜாத்தியின் நாட்களில் ஆமான், அகாஸ்வேருவின் ராஜ்ய மெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்காரிக்க வகைதேடினான் எஸ்தர் 3:6.

யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலை எஸ்தருக்கு காண்பித்து, தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று மொர்தெகாய் அவளுக்குச் சொன்னான். அப்பொழுது எஸ்தர்: ..... நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைக்கப் படவில்லை என்று சொன்னாள்.

மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொன்னது: நீ ராஜாவின் அரண்மனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவா யென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே.

நீ இந்தக் காலத்திலே மவுனமா யிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்போழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்;

நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் என்று சொன்னான்.

அப்போது எஸ்தர்: நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, **மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்;** நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; **நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொன்னாள் எஸ்தர் 4:8-16.

ஒரு மிஷனெரி பத்திரிகையின் "தலைவர் மடல்" என்ற பகுதியிலிருந்து மிக முக்கிய ஜெபக் குறிப்பை கீழே அச்சிட்டுள்ளேன்:

2018 ஜனவரி 16-ம் நாள் இந்திய வரலாற்றில் ஒரு கறுப்பு நாள். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின், நௌஷேரா, ராஜேளரி மாவட்டத்தில் கிறிஸ்தவ

விரோத கிளர்ச்சியாளர்கள் நமது ஆலயங்களில் ஒன்றினைத் தீக்கிரையாக்கியதுடன் இறந்த ஒரு விசுவாசியின் சடலத்தையும் ஆலயத்தின் முன் எரித்தனர். இந்த நிகழ்வு எனக்கு மிகுந்த துக்கத்தை அளித்தது. கண்ணீருடன் தேவனை நோக்கிக் கதறச் செய்தது. அத்துடன் நம்நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்காக உழைக்கும் சுவிசேஷகர்கள் சில பணித்தளங்களில் பணியாற்றுவது எத்தனை கடினமும் ஆபத்தும் நிறைந்தது என உணரச் செய்தது.

திருமதி சீமாதேவி, ராஜ்புத் குடும்பத்தில் இருந்து கிறிஸ்துவை அங்கீகரித்து தன் கணவர் திரு.ரிண் குமார் அவர்களுடன் ஆலய ஆராதனையில் பங்கேற்பவர் என சகோ.சித்தரஞ்ஜன் டாண்டி கூறுகின்றார். சீமாதேவி சுக வீனம் அடைந்த போது பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தருக்கு தன் கணவரால் எடுத்துச் செல்லப்பட்டார். எதிர்பாராவண்ணம், ஜனவரி 15-ம் தேதி இறந்த சீமாதேவியின் உடலை நல்லடக்கம் செய்வதற்காக நவ்ஷேராவிற்கு அவரது கணவர் கொண்டு வந்தார்.

சீமாதேவியின் உறவினர்களும், பெற்றோரும், சீமாதேவி கிறிஸ்தவரான தினாலேயே இவ்விதம் நோய் வாய்ப்பட்டு மரித்தார் எனக் கூறினர். இதனால் பெரும் திரளாக எதிர்ப்பாளர்கள் கூட்டம் கூடி, ஆலயத்தைத் தீக்கிரையாக்கியதுடன், சீமாதேவியின் சடலத்தையும் ஆலயத்தின் முன் எரித்தனர். மற்றும் ஆலயத்திற்குள்ளிருந்த பொருட்களை சேதமாக்கியதுடன் கதவு, ஜன்னல்களை எரித்துச் சாம்பலாக்கினார்.

பதற்றம் மிகுந்த சூழலில், நான் ஜம்மு காஷ்மீர் மாநில காவல் துறையின் தலைமை இயக்குனர் திரு.வைத் அவர்களுடன், ராஜௌரி காவல்துறை கண் காணிப்பாளர் அவர்களுடன் தொடர்பு கொண்டு நிலவரங்களை அறிந்துக் கொண்டேன். தலைமை இயக்குனர், அரசு இச்சம்பவத்தை தீவிரமாக உற்றுக் கவனிப்பதுடன், ஏற்கனவே இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். வன்முறை மற்றும் நாசவேலைகளில் ஈடுபட்டோருக்கு விரோதமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

ராஜௌரி காவல் துறைக் கண் காணிப்பாளர் நடந்த சம்பவம் குறித்து மிகுந்த கவலை தெரிவித்தார். கட்டுக்கு அடங்காத கூட்டம் திரண்டதாலும் போலிசார் விண்ணை நோக்கி சுட்டதுடன், கிளர்ச்சியாளர்களின் முன் வரிசையில் பெருமளவு பெண்கள் நிறுத்தப்பட்டபடியாலும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாமல் போனது என அவர் கூறினார்.

மேலும் இச்சம்பவம் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அமைச்சர்களில் ஒருவருடன் பேசினேன். பொதுக் காரியதரிசி, மற்றும் களச் செயலாளர் இருவரும் இந்த நிகழ்வின் தொடர் விளைவுகளைக் கண்காணித்து வருவதுடன் உங்கள் ஜெபம் வேண்டி பிற தகவல்களை உங்களுடன் பரிமாற்றம் செய்வார்கள்.

சகோதர சகோதரிகளே, இது நமக்குச் சோதனைக் காலம். இப்படிப்பட்ட சவால் மிகுந்த சூழல்களைச் சந்திக்க தேவனின் கிருபையும் அவரது சத்துவமும் நமக்குத் தேவை. இது, நாம் கண்ணீர் சிந்தி அழுகையுடன் துக்கம் அனுபவிக்கும் காலம். தேவ பலத்தால் இத்தகைய சவால்களை நாம் மேற் கொள்ள வேண்டிய காலம்.

நமது தேசத்தின் 130 கோடி மக்களுக்கும், கிறிஸ்துவின் அன்பு, மன்னிப்பு, சமாதானம் மற்றும் இரட்சிப்பின் செய்தியை பகிர்வதின் மூலம் தேவனின் தொடுதலை முழுத்தேசமும் உணரச் செய்ய, நமக்கு அவர் இரங்கி உதவும்படி திருப்பு முனைத் நிகழ்வாக இத்தருணம் அமைவதாக.

****

80 வயதான எனது சொந்த சகோதரி, அடிக்கடி நாகர்கோவிலுக்கும் குஜராத்திற்கும் மிஷனெரி பணியாக பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மனம் உண்டானால் மார்க்கம் உண்டு. எங்களுக்கு வயது அதிகம் ஆகிறது, அங்கெல்லாம் வரமுடியாது, ஒருநாள் உபவாசம் பண்ண இயலாது என்றெல்லாம் சாக்குபோக்கு சொல்லாதீர்கள் லூக்கா 14:16-20 பார்க்க. தயவு செய்து உங்கள் மாவட்டத்தில், மாநிலத்தில் நடைபெறும் உபவாச ஜெபத்திற்கு கட்டாயம் வாருங்கள்.

மும்பையில் எனக்கு அருமையான சில ஆண்டவருடைய பிள்ளைகள் உண்டு. உங்களுக்கு மும்பை உபவாச ஜெபத்தின் பதிவு தாள் அனுப்புவேன். கட்டாயம் வாருங்கள். நாம் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்து, சேர்ந்து ஜெபிப்பது எத்தனை இன்பம்!

மும்பை உபவாச ஜெப அழைப்பு

கர்த்தருக்கு சித்தமானால் ஏப்ரல் மாதம் 12-ம் தியதி காலை 5.30 மணிக்கு நாகர்கோவிலில் இருந்து ரெயில் மூலம் பயணப்பட்டு 13-ம் தியதி இரவு 9.30 மணிக்கு மும்பை வந்து சேருவோம். உபவாச ஜெபம் நடைபெறும் இடத்தை தயவு செய்து விளம்பரத்தில் பாருங்கள். எங்கள் மொபைல் எண்கள் 94897 40295; 94980 30295. மும்பை தொடர்புக்கு: சகோதரன் **செல்சன் சாமுவேல்** மொபைல் 95940 15363.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஏப்ரல் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக
இதய கதறல் – 2018

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **14-04-2018**
2- வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : **Epworth Methodist Tamil Church,**
Nerul, Navi, Mumbai

தொடர்பு : **திரு. செல்சன் சாமுவேல்,** மும்பை
மொபைல் : 95 94 01 53 63

Office :95432 21008
Associate :94897 40295
For Prayer:94980 30295
Editor :04652 403295

Time:
10.00 a.m to 1.00 p.m
02.00 p.m to 6.00 p.m
Sunday Holiday

பத்திரிகை செய்திகள்

சுப்ரீம் கோர்ட் 'கெடு' 4நாளில் முடிகிறது.
மேலான்மை வாரியத்துக்கு பதிலாக

காவேரி மேற்பார்வை ஆணையம்

9 பேர் கொண்ட குழுவை அமைக்க மத்திய அரசு நடவடிக்கை

மார்ச்- 25

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்கள் இடையேயான காவிரி நீர் பங்கீட்டை கவனிக்க காவிரி மேற்பார்வை ஆணையம் அமைக்கப்படும். இந்த ஆணையம், ஒரு சுதந்திரமான உறுப்பினர் தலைமையில் இயங்கும். இது 9 பேர் கொண்டதாக இருக்கும்

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To